தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய அளவிலான Food Explorer'15 தொழில்நுட்பக் கருத்தரங்கம் நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு உணவு பதன் செய் பொறியியல் மாணவர்களால், ஒன்பதாம் ஆண்டு தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் Food Explorer'15 இன்று (16-10-2015) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அண்ணா அரங்கில் நடைபெற்றது.

இத்தொழில்நுட்பக் கருத்தரங்கின் முன்னோட்ட நிகழ்வாக பள்ளி மாணவர்களுக்கான ஓவியம் மற்றும் வினாடி வினா போட்டிகள் நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர் திரு. கௌரி நந்தன் அவர்கள் விழா சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், சர்வதேச வேளாண் உணவு - அமைப்பகம் இன்றைய நாளை உலக உணவு நாளாக அறிவித்துள்ளது. இதன் முக்கிய நோக்கமாக புத்தாய்வு மற்றும் புது முறைகளால் உணவு முறையில் பாதுகர்ப்பு மற்றும் காப்புறுதி அடைதல், சமுதாய பாதுகாப்பு மற்றும் வேளாண்மை, கிராமப்புறங்களில் நிலவி வரும் வறுமையை உடைத்தெறிதல் போன்ற கொள்கைகளை அறிவுறுத்தியுள்ளது. பதப்படுத்தப்பட்ட உணவின் பங்களிப்பு, உணவு பாதுகாப்பு மற்றும் காப்புறுதி அடைவதற்கு உணவு பொறியாளர்களின் பங்களிப்பு ஆகிய தலைப்புகளில் தன் கருத்துக்களைத் தெரிவித்தார்.இந்தியாவில் தற்போதைய உணவு உற்பத்தி மற்றும் பதன் உணவின் பங்களிப்பை விளக்கினார். உணவை வீண் செய்வதைக் குறைத்து அனைவருக்கும் உணவு என்ற நிலை பெறுவதற்கு உணவுப் பொறியாளர்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது என்ற கருத்தை வலியுறுத்தினார்.

இந்த விழாவில் தலைமை உரை நிகழ்த்திய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் முதன்மையர் முனைவர் சி. திவாகர் துரைராஜ் அவர்கள் அறிவியல் கருத்தரங்குகள் 15 வருடங்களாக வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இம்மாதிரியான ஓர் ஒருங்கிணைப்பு மாணவர்களின் திறமைகளை வளர்க்கவும் வெளிக்காட்டவும் ஓர் சிறந்த களமாக விளங்குகின்றது. மாணவர்கள் அறிவியலை ஓர் பாடமாக மட்டும் எண்ணாமல் தங்கள் அன்றாட வாழ்வில் கலந்த ஒன்றாக உணர்ந்து, அறிவியலின் நுட்பங்களை உவந்து புத்துணர்ச்சியுடன் பயில வேண்டும். நமக்கு கிடைக்கும் உணவானது நெல்லாக களத்தில் இருந்து நமது தட்டிற்கு வரும்வரை பல தடைகளைத் தாண்டி பல போராட்டங்களைச் சந்தித்த பிறகே கிடைக்கின்றது. எனவே, அத்தகைய உணவினை நாம் வீணடிப்பது வருந்தத்தக்க ஒன்று என்றும் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குனர், முனைவர் ம. மகேஸ்வரன் அவர்கள் தனது விழா உரையில், உணவு பொறியியல் துறை மாணவர்கள், தொழில்நுட்பத்தோடு உணவு வேதியியல் மற்றும் உயிரியல் சார்ந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். உணவு பாதுகாப்பு மற்றும் காப்புறுதியை சாதாரண மக்களும் அடைவதற்கான திட்டங்களை மாணவர்கள் செயல்படுத்த வேண்டும் என்று கூறினார்.

விழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உணவு மற்றும் வேளாண் பதன் செய் பொறியியல் துறை முனைவர் பாலகிருஷ்ணன், பண்ணை இயந்திரவியல் துறை தலைவர் முனைவர் சுரேந்திர குமார் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நான்காம் ஆண்டு வேளாண் பொறியியல் கல்லூரி மாணவர் ஆர். சல்மான் வரவேற்புரை வழங்கினார். நான்காம் ஆண்டு வேளாண் பொறியியல் கல்லூரி மாணவி செல்வி. ரேணுகா தேவி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்